பக்கங்கள் 14

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 21 வியாழக்கிழமை 07.09.2023 அதிர்வு 38

## ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் யாழ் நகரில் கைது

கொழும்பு மாநகர சபையில் பணியாற்றும் 46 வயதான ஊழியர் ஒருவர் இன்று காலை ஹெரோயினுடன் யாழ்ப் பாணம் பஸ் நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

04

# ‘சனல்–4’ செய்திக்கு கோட்டாபய மறுப்பு!

## மௌனம் கலைத்து அறிக்கை



கொழும்பு,செப்ரெம்பர்07

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிரித்தானியாவின் ‘சனல் -4’ அலைவரிசை வெளியிட்ட காணொலி தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மறுப்புத் தெரிவித்துள்ளார்.

04



# ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து சர்வதேச விசாரணை அவசியம்

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரும் வலியுறுத்து

கொழும்பு,செப்.07

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சர்வதேச ஆதரவுடன் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

எனினும் இந்த அறிக்கை தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள ‘சனல்–4’ காணொலி

04

# பொறுப்புக்கூறலுக்கு இலங்கையின் மீது சர்வதேசம் அழுத்தம் கொடுக்க வேண்டும்

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கோரிக்கை

பொறுப்புக்கூறல் தொடர்பில் சர்வதேச சமூகம் இலங்கையின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில்குற்றச்செயல்களுக்குப் பொறுப்புகூறல் மிகவும் இன்றியமையாதது எனவும் அது தெரிவித்துள்ளது.

போர் முடிவடைந்து

04



## பொலிஸ்க்கு போகின்றார் பிள்ளயான்!

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ‘சனல்–4’ இல் குறிப்

03

## சிறுமியின் கை அகற்றப்பட்ட வழக்கு: தாதிக்கு பயணத் தடை விதிப்பு!



யாழ்ப்பாணத்தில் 8 வயது சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் குற்றம்சாட்டப்படும் தாதிக்கு யாழ். நீதிவான் நீதிமன்று பயண தடை விதித்துள்ளது.

காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட

04



ගෝඨාභය රාජපක්ෂ
கோட்டுபய ராஜபக்ஷ
GOTABAYA RAJAPAKSA

B20, Stanmore Crescent, Colombo 07, Sri Lanka.

7th September 2023

MEDIA RELEASE

The latest Channel 4 film on Sri Lanka

The central allegation made in the latest film on Sri Lanka broadcast by Channel 4 is that the Easter Sunday suicide bombings of 21 April 2019 carried out by Islamic extremists had been deliberately facilitated in order to create the conditions to get me elected to power in November

## தமிழைக் கொலை செய்த கோட்டாவின் அறிக்கை!

ஜனாதிபதிப் பதவியைக் கடந்த ஆண்டு ஜுலையில் துறந்த காலம் முதல் மௌனம் காத்து வந்த கோட்டாபய ராஜபக்ஷ, முதல் தடவையாக இன்று ‘சனல்–4’ செய்தி நிறுவனத்தின் காணொலிக்கு

04

# தொழுநோயாளர்களின் எண்ணிக்கை உயர்வு!



நாட்டில் தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதாரத் தரப்பினர் எச்சரிக்கை விடுத் துள்ளனர்.

இதன்படி, இந்த ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் மாத்திரம் 864 தொழுநோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பில் மாத்திரம் இதுவரை 161 தொழுநோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மேல் மாகாணத்தில் எதிர்வரும் வாரம் முதல் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வு பதாதை களைக் காட்சிப்படுத்துவதற்கான நடவ டிக்கை முன்னெடுக்கப்படும் எனத் தொழுநோய்த் தடுப்புப் பிரிவு தெரி வித்துள்ளது.

இலங்கையில் மாத்திரம் வருடாந்தம் சுமார் 2,000 தொழுநோயாளர்கள் பதிவு செய்யப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த எண்ணிக்கையில், 10 வீதமானோர் சிறுவர்கள் எனவும் கண்ட றியப்பட்டுள்ளது.

இதனிடையே, பொலநறுவை மாவட்டத்தில் இந்த வருடம் இதுவரை யான காலப்பகுதியில் மாத்திரம் ஐந்து பாடசாலை மாணவர்கள் உட்பட 22 பேர் தொழுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் கண்டறியப்பட்ட மூன்று தொழுநோயாளர்கள் அடங்கலாக 25 பேர் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர் என மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், தோலில் வெளிர் நிற புள்ளிகள் மற்றும் குறித்த இடத்தில் உணர்வின்மை போன்ற அறிகுறிகள் தென்படுமாயின் சுயமாக நோயைக் கண்டறிவதற்கான வசதி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

அவ்வாறு தோலில் வெளிர் நிற புள்ளிகள் காணப்படுமாயின் அவற்றை புகைப்படம் எடுத்து 075 4088604 அல்லது 075 4434085 என்னும் வட்ஸ்அப் இலக்கங்களுக்கு அனுப்பு வதன் மூலம் நோய் குறித்த விடயங் களை அறிந்துகொள்ள முடியுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தடுப்பூசி செலுத்தப்பட்ட பின் மற்றொரு குழந்தை உயிரிழப்பு

வெலிகம – நலவன பகுதியில் தடுப்பூசி செலுத்தப்பட்டதன் பின்னர், 4 மாத குழந்தையொன்று உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைக்குச் செலுத்தப்பட்ட தடுப்பூசி விஷமானமையே இறப்புக்கான காரணம் எனக் குழந்தையின் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த 2 ஆம் திகதி நான்கு மாதத்திற்கான தடுப்பூசி, வெலிபிட்டிய சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் குறித்த குழந்தைக்கு செலுத்தப்பட்டது.

இதனையடுத்து, குறித்த குழந்தைக்கு ஏற்பட்ட கடும் குளிர் காரணமாக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

எனினும், அந்த குழந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னரே இறந்திருந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரியவந்துள்ளது.

## வவுனியா இரட்டைக் கொலை சம்பவம் மூன்று பேருக்கு நீதிமன்றம் பிடியாணை

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்கள் மூவருக்கு வவுனியா நீதிமன்றம் இன்று பிடியாணை பிறப்பித்துள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த ஜூலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி, பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் இருவர் மரணமடைந்திருந்தனர். இந்த இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஆறு பேர் கைது செய்யப்பட்டிருந்தமையுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இதன்போது, மேலும் மூன்று சந்தேக நபர்களுக்கு எதிரான சாட்சியங்கள் உறுதிப்படுத்தப்பட்டமையினால் அவர்களைக் கைது செய்ய குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.அந்த மூவரும் தலைமறைவாகவுள்ளமையால் அவர்களது கடவுச் சீட்டுகள் நீதிமன்றத்தால் முடக்கப்பட்டுள்ளன. அவர்களைக் கைது செய்யப் பகிரங்கப் பிடியாணை உத்தரவு வவுனியா நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களுக்கான அடையாள அணிவகுப்புக்கு இன்று திகதியிடப்பட்டிருந்தது. எனினும் அடையாள அணிவகுப்புக்கு உரிய நபர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றமையால் வழக்கு அடையாள அணிவகுப்புக்காக எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு மீண்டும் திகயிடப்பட்டது.

## ஹரக் கட்டா’வை விடுவிக்க பொலிஸார் மீது அழுத்தமாம்



பாரியளவிலான போதைப் பொருள் கடத்தல்காரரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்தவருமான நதுன் சிந்தக விக்கிரமரத்ன என்ற ஹரக் கட்டாவை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்திவரும் நிலையில், அவரை விடுவிக்குமாறு அரசாங்கத்தின் பலம் வாய்ந்த அமைச்சர் ஒருவரும் அவரது மகனும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு அடிக்கடி அழுத்தம் கொடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ் தலை மையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தடுப்புக் காவல் உத்தரவில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஹரக்கட்டாவை விடுவிக்க இந்த அமைச்சரும் அவரது மகனும் கடுமையாக முயற்சித்து வருகின்றனர் எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு இவர்கள் இருவரும் அடிக்கடி அழுத்தம் கொடுத்து வருவதால், பொலிஸ் உயர் அதிகாரிகள் மிகுந்த அசௌகரியத்துக்கு ஆளாகி யுள்ளனர் எனப் பொலிஸ் உயர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



# மக்களது வாழ்வியலை புரட்டிப்போட்டது யுத்தமே!

## கரவெட்டிப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் இராமநாதன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

பொருளாதார ரீதியாக தன்னிறைவு கண்டிருந்த எமது மக்களது வாழ்வியலை உள்நாட்டு யுத்தம் புரட்டிப்போட்டுள்ளது என்று கரவெட்டிப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் செயலாளருமான ச.இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வரணி பிரதேசத்தில் அபிவிருத்தி திட்டம் ஒன்றுக்கான அடிக்கல் நடும் வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

உள்நாட்டு யுத்தம் காரணமாக எமது மக்கள் சொந்தக் காலில் நிற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எந்தவிதமான உதவித் திட்டங்களும் இன்றி தன்னிறைவான, மகிழ்வான வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் எமது மக்கள். ஆனால் யுத்தம் அவர்களை அதே மகிழ்வோடும் வசதியோடும் வாழ விடவில்லை.

யுத்தத்தால் அனைத்தையும் இழந்த மக்களுக்கு அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது எமது கடமை. இந்த அபிவிருத்தி கட்டாயமானதும் கூட. கடந்த காலங்களில் கிராமம் தோறும் சென்று மக்களுடைய தேவைப்பாடுகளை அறிந்து நிவர்த்தி செய்திருந்தோம். ஆனால் அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி அபிவிருத்திக்கு தடை போட்டுள்ளது. இருப்பினும் வேறு பல வழிகள் ஊடாக மக்களுடைய கனவுகளை நிறைவேற்றி வருகிறோம்.

யுத்த காலததுக்கு முன்னர் வீட்டுத் திட்டம் போன்ற உதவித்திட்டங்கள் இருந்ததும் இல்லை. அவை எமக்குத் தேவைப்பட்டதும் இல்லை. யுத்தத்தின் பின்னர் மக்கள் பொருளாதார ரீதியாக நலிவடைந்து விட்டனர். யுத்த காலத்துக்குப் பின்னர் எமது மக்களுடைய உற்சாகம் குறைந்து விட்டதாகவே எண்ணத் தோன்றுகிறது.

எமது பிரதேசத்தில் தொழில் வாய்ப்புக்கள் இருந்தும் அந்த தொழில் முயற்சிகளில் ஈடுபட எம் மக்கள் தயாரில்லை.எனவே வேறு பிரதேசத்தில் இருந்து வேலைகளுக்கு ஆள்களை அழைத்து வரவேண்டிய நிலை காணப்படுகிறது. எமது பிரதேச இளைஞர்கள் வெளிநாட்டு மோகத்தில் திளைத்துள்ளனர். வெளிநாட்டில் காட்டும் உழைப்பை இங்கு காட்டினால் சொந்த ஊரில் பழைய கால நினைவுகளுடன் நிம்மதி யாக வாழ முடியும்.- என்றார்.

# தற்கொலைகளைத் தடுப்பதற்கான ஆலோசனை வழங்கும் கருத்தரங்கு

(கே. எ. ஹமீட்)

தற்கொலைகளைத் தடுப்பதற்கான ஆலோசனை வழங்கும் கருத்தரங்கு மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

இந்தக் கருத்தரங்கு மாவட்டசெயலக மாநாட்டு மண்டபத்தில் திங்கட்கிழமை (04) இடம்பெற்றது. மாவட்ட செயலக பிரதி கணக்காளர் எம்.ஏ பஷீர் தலைமையில் இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது.

அதில் அவர் தலைமை உரையாற்றும் போது,நாட்டில் தற்கொலைகள் அதிகரித் துள்ள நிலையில் அதனைத் தடுப்ப தற்கான ஆலோசனை வழங்குவது தொடர்பிலும் எம்மால் உதவ முடியும்.

கடந்த 2022 ஆம் ஆண்டு 3224 தற்கொலைச் சம்பவங்கள் நாட்டில் இடம்பெற்றுள்ளன.

இதில் அதிகமானவர்கள் ஆண்க ளாக உள்ளனர். குடும்பச் சுமை, போதைவஸ்துப் பாவனை, பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள், வறுமை, மன உளைச்சல், தோல்வி மனப் பான்மை போன்ற காரணிகளால் இத் தற்கொலைகள் நிகழ்ந்துள்ளன.

அத்துடன் 1333 எனும் இலக்கத் துக்கு அழைத்து தற்கொலைகளைத் தடுப்பதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம்.- என்று தெரிவித்தார்.தைரியம் முகாமிடுதல் அர்ப்பணிப்பு சம்மேளனத்தின திட்டஅதிகாரிகாமிலாஉரையாற்றுகையில்,

இந்தத் தற்கொலைகளைத் தடுப்பதற்கான பல்வேறு முயற்சிகளை எமது நிறுவனம் மேற்கொள்கிறது. 1333 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு எந்த நேரத்திலும் அழைத்து ஆலோசனைகள் பெறமுடியும். பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பு கொண்டு உளவியல் ரீதியான ஆலோசனைக ளைப் பெற முடியும்.- என்றார்.

### பொலிஸுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடப்பட்ட கிராமப்புற வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் என்கின்ற பிள்ளையான், பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின் பின்னர் பொலிஸில் குற்றவியல் பிரிவில் தாம் முறைப்பாடு பதிவு செய்யவுள்ளார் எனத் தெரிவித்தார்.

'சனல்-4' ஊடாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று சிவநேசதுரை சந்திரகாந்தன் முறைப்பாடு செய்ய முயற்சித்துள்ளார்.

"பொலிஸ் மா அதிபருடன் கலந்தாலோசித்து இந்த முறைப்பாடை அவரது ஒப்புதலுடன் ஒப்படைக்குமாறு அதிகாரிகள் என்னிடம் தெரிவித்தனர். நான் வியாழன்று (இன்று) சந்திப்பைப் பெற்றுள்ளேன். நான் அவருடன் பேசி ஆவணங்களை ஒப்படைப்பேன்" - என்று அவர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## பொறுப்புக்கூறலுக்கு...

14 ஆண்டுகள் முடிவடைந்துள்ள நிலையிலும் பாதிக் கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் வேதனை யுடன் வாழ்ந்து வருகின்றனர் எனவும் அது தெரி வித்துள்ளது.

போர்க் குற்றச்செயல்கள், அண்மைய மனித உரிமை மீறல்கள், ஊழல் மோசடி கள், அதிகாரத் துஷ்பிரயோகம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பிலான பொறுப்புகூறல் முன்னெடுக்கப்பட வேண் டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாடு முன்னோக்கி நகர வேண்டுமா யின் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் எனவும்,பொறுப்பு கூறல் விவகாரத்தில் இலங்கை தொடர்ந் தும் பின்னடைவை எதிர்நோக்கி வருவ தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்சிலின் ஆணையாளர் வோல்கர் ருக் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

உண்மையை கண்டறிதல் மட்டும் போதுமானதல்ல எனவும் பொறுப்புகூறல் மற்றும் மாற்றங்களை நடைமுறைபடுத்தக் கூடிய அரசியல் விருப்பம் என்பனவும் மிகவும் அத்தியாவசியமானவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை துரிதப்படுத்தி குற்றவா ளிகளுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டும்எனவும்அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக் குதல் தொடர்பில் சர்வதேச உதவியுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் ஏற்கனவே அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இலங்கையின் பொருளாதார பிரச்சி னைக்கு சர்வதேச சமூகங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ள அதேவேளை, குற்றசெயல்களுக்கு பொறுப்புக்கூறல் வெளிப்படைத்தன்மை, நல்லாட்சி ஆகிய விடயங்களில் அர்த்த பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதனை இலங்கைக்கு வலியு றுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் மற்றும் இலங் கையின் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து நிறுவன ரீதியான மாற்றங்களை, மறுசீரமைப்புகளைச் செய்து, குற்றச்செயல்களுக்கு பொறுப்பு கூறல், நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் மனித உரிமைகளை உறுதி செய்தல் ஆகிய விடயங்களுக்கு முக்கியத் துவம் அளித்துச் செயல்பட வேண்டும் என அவர் மேலும் கோரிக்கை விடுத் துள்ளார்.

## தமிழைக் கொலை...

மறுப்புத் தெரிவிக்கும் அறிக்கையை வெளியிட்டு மௌனம் கலைத்தார்.

அவர் கையெழுத்திட்ட அந்த அறிக் கையைத் தாங்கிய அவரது கடிதத் தலைப்பில் 'கோட்டாபய ராஜபக்ஷ்' என்ற அவரது பெயர் முழு தமிழ் கொலையோடு இடம்பெற்றிருந்தது.

கணினியில் இருந்த கடிதத் தலைப்பு அச்சுக்கு வந்த போது 'பொண்ட்' மாறி வேறு எழுத்துக்களாகியிருக்கும் என்று கருதப்படுகின்றது.

எனினும் இந்த அறிக்கையை சரிபார்க் கும் அவரது உதவியாளர்கள் எவருக்கும் தமிழ் தெரியாத காரணத்தினால் பெரும் தமிழ் படுகொலையோடு, ஜனாதிபதி பதவிக்கு பின்னரான அவரது முதலாவது அறிக்கை வெளியாகும் அவலம் நேர்ந்துள்ளது.

தமிழர்களையே கொன்று இனவழிப்புச் செய்த குற்றச்சாட்டுக்குள்ளாகியிருக்கும் அவருக்கு தமிழ் எழுத்துக் கொலை அவ் வளவு மோசமானதாகப் பட்டிருக்குமோ தெரியவில்லை.

## சிறுமியின் கை...

08 வயது சிறுமியின் கையில் பொருத் தப்பட்ட 'கானுலா' தவறாகப் பொருத்தப்பட் டதால், சிறுமி பாதிப்புக்கு உள்ளான நிலையில், சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டது.

அது தொடர்பில் சுகாதார அமைச்சு, யாழ். போதனா வைத்திய சாலை, வட மாகாண ஆளுநர் ஆகியோரால் நியமிக்கப்பட்ட விசாரணை குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், பெற்றோரினால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸா ர் விசாரணைகளை முன்னெடுத்து, சம்பவம் தொடர்பில் வாக்குமூலங்களை பதிவு செய்திருந்தினர்.

அதனை தொடர்ந்து இன்றைய தினம் வியாழக்கிழமை யாழ். நீதவான் நீதி மன்றில் வழக்கு எடுக்கப்பட்டது. பெற்றோர் சார்பில் சம்பந்தப்பட்ட தாதியார் வெளிநாடு தப்பிச் செல்லாதவாறு பயணத்தடை விதிக்க வேண்டும் என மன்றில் கோரிக்கை வைக்கப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்ட மன்று தாதிக்கு பயணத் தடை விதித்ததுடன், வழக்கை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

## ஈஸ்டர்...

விவகாரத்துக்கு முன்னர் தயாரிக்கப்பட்டது என்று விடயமறிந்த வட்டாரங் கள் தெரிவித்தன.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வொல்கர் ருக் இலங்கை யின் மனித உரிமை நிலைமைகள் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட் டுள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கையி லேயே மேற்கண்ட விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சர்வதேச ஆதரவுடன் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் ஒரு வருடத்துக்கு முன்னர் இடம்பெற்ற பாரிய மக்கள் போராட்டங்களை கருத்தில் கொண்டு, வரலாற்று மாற்றத்தின் சவால்களை யதார்த்தமாக்குவதற்கு அர்ப்பணிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

யுத்தம் முடிவடைந்து 14 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அதனால் பாதிக் கப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நீதி, நியாயம், உண்மை என்பன நிறைவேற்றப்படாமல் வேதனையுடன் வாழ்ந்து வருவதாக உயர்ஸ்தானிகர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் பொறிமுறையொன்று அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள நிலையில், அவ்வாறானதொரு பொறிமுறைக்காக உண்மையான பின்னணியை தயார் செய்ய வேண்டும் எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச கொள்கைக்கு முரணானது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூல மானது சிவில் மற்றும் அரசியல் உரி மைகள் தொடர்பான சர்வதேச சாசனத்தின் 19-3 பிரிவு மூலம் உத்தரவாதம் அளிக் கப்பட்ட கருத்துச் சுதந்திரத்தின் மீது தேவையற்ற கட்டுப்பாடுகளை விதிப்பதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனிமனித உரிமைகள் மீது கட்டுப்பாடு களை விதிக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை போன்றே இதுவும் அமைந்துள் ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

## 'சனல்-4' செய்திக்கு...

அந்தக் காணொலியில் முன்வைக்கப் பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் வகையில் அறிக்கை ஒன்றை வெளியிட் டுள்ள அவர் அந்த மறுப்பை அதில் தெரிவித்துள்ளார்.

2005 இலிருந்து வரும் ராஜபக்ஷ ர்களின் பாரம்பரியத்தை கருமையாக்கும் நோக்கில் இந்தக் காணொலி வெளியிடப் பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, ராஜபக்ஷர்களுக்கு எதிராக இந்தச் சனலில் ஒளிபரப்பப்பட்ட முந்தைய படங்களைப் போலவே இதுவும் பொய் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜூலையில் ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகியமை முதல் மௌனம் காத்து வந்த கோட்டாபய அந்த மௌனத்தைக் கலைத்து முதல் தட வையாக அறிக்கை ஒன்றை வெளியிட்டி ருக்கின்றார்.

இன்றைய திகதியில் இலங்கையின் ஏழாவது ஜனாதிபதி எனக் குறிப்பிட்டு ஒப்பமிட்டு இந்த அறிக்கையை அவர் வெளியுட்டுள்ளார்.

## ஹெரோயின்...

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக் குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்ப டையில், பொலிஸ் விசேட அதிரடிப்படை யினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது சந்தேகபரிடமிருந்து 30 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர், ஹெரோயினை விற்பனை செய்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார் என ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவருகிறது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகபர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

# கல்முனையில் மருத்துவ முகாம்







(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் சாய்ந்தமருது மற்றும் சம்மாந்துறை ஆகிய இடங்களில் இயங்கி வரும் கிளை வைத்திய சாலைகளின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு மருத்துவ முகாம் செவ்வாய்க்கிழமை (05) கல்முனை இலங்கை போக்குவரத்து சபையின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கை போக்குவரத்து சாபையிலும், பிராந்திய அலுவலகங்களிலும் கடமையாற்றும் உத்தியோஸ்தர்களும் ஊழியர்களும் கலந்து கொண்ட இந்த வைத்திய முகாமில் குருதியில் சீனியின் அளவு, உடற்பருமன் சுற்றளவை கணித்தல், குருதி அழுத்தம், குருதியில் ஒட்சிசனின் அளவை அறிதல், கண் பரிசோதனை போன்றவற்றுக்கான சிகிச்சையும், உடற்பயிற்சி, உணவுப் பழக்க வழக்கம் சம்பந்தமான ஆலோசனை, நீரழிவு, பக்கவாதம், நாட்பட்ட நோய்கள் சம்பந்தமான ஆலோசனைகளும் அவற்றுக்கான ஆலோசனைகளும் இந்த மருத்துவ முகாமின் போது வழங்கப்பட்டன.

இந்த மருத்துவ முகாமில் கல்முனை ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை உத்தியோஸ்தர்கள், ஊழியர்கள், வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# மணியர்குளம் பாடசாலைக்கு புலம்பெயர் தமிழர்கள் உதவி

வவுனியா மாவட்டம் பூவரசன்குளத்தில் உள்ள மணியர்குளம் வித்தியானந்தா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 25 மாணவர்களுக்கு பாடசாலை சீருடைகளையும் சப்பாத்துக்களையும் அமெரிக்கா, கனடா மற்றும் நோர்வே வாழ் உறவுகள் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

அமெரிக்காவைச் சேர்ந்தவர்களான ஜெயந்தி பொன்னையா, லவன் பொன்னையா, கனடாவைச் சேர்ந்த திருமதி ஞானமலர் சண்முகராஜா மற்றும் நோர்வேயைச் சேர்ந்த திருமதி லலிதாதேவி சிவகுமார் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் சீருடைகளும் சப்பாத்துகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு செவ்வாய்க்கிழமை (05) நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி வாசுகி பரமவேல் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செட்டிக்குளம் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சிவம் என்று அழைக்கப்படும் சுப்பையா ஜெகதீஸ்வரன், வவுனியா சிவபுரம் ஆரம்ப பாடசாலையின் அதிபர் பொன்னுச்சாமி யோகநாதன், சமூகச் செயற்பாட்டாளர்களான மகாதேவா சுஜேந்திரன், பஞ்சலிங்கம் சிறீதரன் மற்றும் இராஜதுரை தயாபரன் ஆகியோர் பங்கேற்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தயாசிறியின் தப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகர அதிரடியாக நீக்கப் பட்டுள்ளார்.

கட்சியின் பொதுச் செயலாளராக கட்சியின் மாநாட்டை நடத்துவது தொடர்பில் அவர் எடுத்த நடவடிக்கைகளை கடைசி நேரத்தில் குழப்பி, மாநாட்டை கொழும்புக்கு மாற்றி, தம் எண்ணப்படி கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன செயற்பட்ட போதே தயாசிறி ஜயசேகரவுக்கு ஆப்புத் தயாராகி விட்டது என்பது எதிர்பார்க்கப்பட்டதே.

"நாடாளுமன்றத்தில் மாலை நாலு மணி வரை நானும் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் ஒன்றாகவே இருந்தோம். கலந்துரையாடலில் ஈடுபட்டோம். ஆனால் இரவில் என் கழுத்தை அறுப்பார் (பதவி நீக்கம் செய்வார்) என நான் நினைக்கவில்லை" - என்று ஆதங்கத்துடன் கூறி இருக்கின்றார் தயாசிறி.

தயாசிறி ஜயசேகர அப்படிக் கூறுவதுதான் ஆச்சரி யமானது. தமது கட்சித் தலைவரை - அவரின் கடந்த காலப் போக்குகளை - பண்பியல்புகளை - அறியாமல் கட்சியில் அவரது தலைமையின் கீழ் தயாசிறி ஜயசேகர இவ்வளவு காலமும் பணியாற்றி இருக்கிறாரா என்பதுதான் ஆச்சரியத்துக்குரியது.

முதல் நாள் இரவு அப்போது கட்சியின் தலைவராகவும் ஜனாதிபதியாகவும் இருந்த மஹிந்த ராஜபக்ஷவுடன், அச்சமயம் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன அலரி மாளிகையில் ஒன்றாக இருந்து அப்பம் சாப்பிட்டார். அடுத்து நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளராக அறிவிக்கப்பட்ட கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுடன் கட்சியின் பொதுச்செயலாளர் என்ற முறையில் தேர்தல் தந்திரோபாயங்கள் குறித்துப் பேசினார். அச்சமயத்தில் கூட்டு எதிரணி தங்களுக்கு எதிராக விரிக்கக் கூடிய வலை, பொறி போன்றவை குறித்தும், அவற்றை முறியடித்துத் தேர்தலில் கட்சியின் வேட்பாளரும், தலைவருமான மஹிந்த ராஜபக்ஷவை வெல்லச் செய் வதற்கான திட்டங்கள், நடவடிக்கைகள் குறித்தும், அப்பம் சாப்பிட்டபடி கருத்துப் பரிமாறினார்.

நள்ளிரவு வரை இவ்வளவையும் செய்து விட்டுத்தான், அடுத்த நாள் காலையில் கூட்டு எதிரணியின் மேடையில் ஏறி, சுதந்திரக் கட்சி தலைவரும் அதன் ஜனாதிபதி வேட்பாளருமான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான கூட்டு எதிரணியின் பொது வேட்பாளர் தாமே என்று அறிவித்தார் மைத்திரி. சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளருக்கு எதிராக அன்னச் சின்னத்தில் களமும் இறங்கினார். கட்சிக்குள்ளும் முதல் நாள் இரவு வரை உறவாடிப் பேசிக்கொண்டு, அடுத்த நாள் காலையில் கழுத்தறுக்கும் வேலை செய்வது மைத்திரிக்கு ஒன்றும் புதிய விடயமேயல்ல.

ஆரம்பத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி வரை உயர்ந்த அவருக்கு, அதுவரை தனித்துவ அதிகாரம் கிட்டவில்லை. ஆனால், ஜனாதிபதியாகவும், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி கட்சியின் தலைமையைப் பிடுங்கி எடுத்த பின்னர் கட்சித் தலைவராகவும் அவருக்குத் தனித்துவ அதிகாரங்கள் கிடைத்தன. அவற்றை வைத்துக் கொண்டு ஆட்டம் போடுவதுதான் அவரது தனித்துவப் பாங்கு. ஏறிய ஏணியை எட்டி உதைக்கப் பின்னிற்காதவர் அவர்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவு, தாராளம், விட்டுக்கொடுப்பு, கடும் பிரசார உழைப்புப் போன்றவைதான் தமக்கு ஜனாதிபதிப் பதவியைப் பெற்றுத் தந்தன என்பதை மறந்து, ஜனாதிபதிப் பதவிக்கு வந்ததும் அவரைப் பந்தாடியவர் மைத்திரி.

அத்தகையவர் இரவோடு இரவாகத் தமக்குக் கழுத்தறுக்க மாட்டார் என்று இதுவரை தயாசிறி ஜயசேகர நம்பிச் செயல்பட்டமை தயாசிறியின் தப்பு.

# தெய்வீக திருக்கூட்டத்தில் நல்லை ஆதீனத்தில் நாளை

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு திருஞானசம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் நடத்தும் தெய்வீகத் திருக்கூட்ட தொடர் நிகழ்வில் 19 ஆம் நாள் நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.15 மணிக்கு நடைபெறும்.

நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வா இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் முன்னிலையில் அமெரிக்க ஹவாய் வைச ஆதீன குருதேவர் சிவசுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் ஆன் மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் அருளுரை இடம்பெறும்.

நாகபூசணி அம்மன் குரு சிவஸ்ரீ வாமதேவக் குருக் கள் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் கதிர்காமர் திருக்குமார் பிரதம விருந்தினராகவும் யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் சி.ரமணராஜா சிறப்பு விரந்தினராகவும் கலந்துகொள்வர்.

பருத்தித்துறை நெல்லண்டை அம்மன் அறநெறி பாடசாலை, புற்றலை சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை ஆகிய அறநெறி பாடசாலை மாணவர்கள் கலைநிகழ்வுகளை வழங்கவுள்ளனர்.

அறநெறி பாடசாலை பொறுப்பாசிரியர் திருமதி ம.தமிழ்ச்செல்வி "யாமிருக்கப் பயமேன்" எனும் தலைப்பில் சிறப்புரைநிகழ்த்துவார். "மனிதவிழுமியங்கள்" எனும் தலைப்பில் இந்துகலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த.கிரிசா கருத்துரை ஆற்றுவார்.

முதுதத்துவமாணி திருமதி செல்வாம்பிகையின் நெறியாள்கையில் மானிப்பாய் கலைக் கோயில் மன்ற மாணவிகள் வழங்கும் ஓம் சரவணபவ நடனம் மற்றும் லாஸ்யம்பதி நடனமன்றம் வழங்கும் காவடி நடனம் ஆகிய சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

# திரிபோஷவை தனியார் மயமாக்காமல் முறையாக வழங்க நடவடிக்கை தேவை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



திரிபோஷவை நிறுவனத்தைத் தனியார் மயமாக்காமல் முறையாகத் திரிபோஷாவை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரிபோஷா வழங்குவதில் பாரிய குறைபாடு காணப் படுகிறது. சிறு பிள்ளைகள், பாலூட்டும் தாய்மார்கள், கர்ப் பிணித் தாய்மார்களுக்கு கூட முறையாகத் திரிபோஷா வழங்கப்படுவதில்லை.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று (07) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

திரிபோஷ தொழிற்சாலையையும் தனியார் மயமாக்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு தனியார்மயமாக்காது திரிபோஷவை உரிய முறையில் வழங்குவது எந்தவொரு அரசினதும் தேசியப் பொறுப்பு . அதனை முறையாக வழங்க நடவடிக்கை எடுங்கள். உரிய தரப்புகள் இந்த விடயத்தில் அக்கறை எடுக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.







# நல்லூரில் தெய்வீகத் திருக்கூட்டம் 17 ஆம் நாள் நிகழ்வுகள்

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வின் 17 ஆம் நாள் நிகழ்வு நேற்று புதன்கிழமை மாலை யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட உதவி விரிவுரையாளர் சுவாமிநாதசர்மா தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம் பெற்றது.

யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி. யமுனானந்தா பிரதம விருந்தினராகவும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஜானகி தர்மஜீலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

நல்லூர் தலையாளி ஞான வைரவர் அறநெறி பாடசாலை மாணவர்கள் மற்றும் நாவலர் கலாசார மண்டப நடன மாணவர்கள் நிகழ்வுகளை வழங்கினர்.

குருகுலத்தின் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலட்சுமி, பிரம்மஸ்ரீ கி.குக விக்னேஸ்சர்மா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நுண்கலைமாணி திருமதி கஸ்தூரி பிரபாகரன் அவர்களின் பக்தி இசை, மற்றும் திருமதி பகீரதி சுப்பிரமணியசர்மாவின் நெறியாள்கையில் கீதவாகினி இசை கல்லூரி மாணவர்களின் பல்லியம் வாத்திய பிருந்தா மற்றும் இசைக் கச்சேரி என்பனவும் இடம்பெற்றன.









# கணிதப் பிரிவில் மன்னாரில் முதலிடம்

(மன்னார் நிருபர்)

உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த.உயர்தர பரீட்சையில் கணிதப் பிரிவில் மன்னார் மாவட்டம் மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட அடம்பன் மத்திய மகா வித்தியாலய மாணவன் தியாகன் தேவகரன் 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார்.

முதலிடம் பெற்ற மாணவன் தேவகரன் அடம்பன் வண்ணாகுளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.

அவரது உயர்வுக்கு பெற்றோர்களின் ஊக்கப்படுத்தல் செயற்பாடுகள் மிக முக்கிய காரணமாக இருந்துள்ளது என்று பாடசாலை ஆசிரியர்கள் தெரிவித்தார்கள்.





# கிழக்குப் பொலிஸாருக்கு இரண்டாம் மொழிப் பயிற்சி

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் மொழி தமிழ்ப் பயிற்சி நெறி வழங்கப்பட்டுள்ளது.

இதன் இறுதி நாள் நிகழ்வு மாவட்ட செயலக புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் கட்டான பொலிஸ் பயிற்சி பிரிவின் பணிப்பாளருமாகிய புத்திக சமரபால கலந்து கொண்டார்.

இந்தக் கற்கை நெறியானது கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் சிங்கள மொழி பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

150 மணித்தியாலங்களை கொண்ட இந்த இரண்டாம் மொழி தமிழ்ப் பயிற்சி நெறியில் 215 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

உத்தியோகத்தர்களின் தமிழ் மொழி ஆற்றலை விருத்தி செய்வதற்கும் கடமையின் போது வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்கும் ஏதுவாக இது அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவிச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், ஏனைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உத வியாளர் , வளவாளர்கள் கலந்து கொண்டனர்.



# பட்டிருப்பு மாணவர் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்து பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவபீடத்துக்கு 02 மாணவர்களும், பொறியியல் துறைக்கு 04 மாணவர்களும், உயிரியல் விஞ்ஞான, பௌதீக விஞ்ஞான துறைகளுக்கு 62மாணவர்களும். வர்த்தகத்துறைக்குப் 17 மாணவர்களும், கலைத்துறைக்கு 35 மாணவர்களும், தொழிநுட்பத் துறைக்கு 06 மாணவர்களுமாக மொத்தம் 126 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

காத்திருப்போர் பட்டியலில் இருந்து இன்னும் பல மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்ல வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று பாடசாலை அதிபர் எம். சபேஸ்குமார் தெரிவித்தார்.

மாணவர்களது அடை மட்டத்துக்குப் பங்களிப்பு செய்த அதிபர், பிரதி அதிபர் , உதவி அதிபர்கள், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சபை, பழைய மாணவர் சங்கம், மற்றும் பெற்றோர்கள் நலன்விரும்பிகள் அனைவருக்கும் கல்வி சமூகம் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது.



# சுகாதார உத்தியோகத்தருக்குப் பயிற்சி



(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண சபையால் பல்நோக்கு அபிவிருத்திச் செயலணி ஊழியர்கள் 886 பேருக்கு வழங்கப்பட்ட நிரந்தர நியமனத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக் குட்பட்ட அலுவலகங்களில் நியமிக்கப்பட்ட சுகாதார உத்தியோகத்தர் 160 பேருக்கு வரவேற்பும், பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளன.

செவ்வாய்க்கிழமை (05) காலை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் இது நடைபெற்றது.

இந்த நிகழ்வை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்துவைக்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள், சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையுரையாற்றினார்.

இந்த பயிற்சி வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள், சுகாதாரப் பணிமனை, ஆரம்ப சுகாதார நிலையம், மருந்தகம், களஞ்சியம் போன்ற பல்வேறு இடங்களில் களப் பயிற்சியாகவும் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் நாள் பயிற்சியை சம்மாந்துறை வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஆசாத் எம். ஹனீபா, அக்கரைப்பற்று வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ரீ.எஸ். ஆர்.ரீ. ஆர்.ரஜாப் ஆகியோர் வழங்கினர்.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பி.எம். வாஜித் உட்பட பிரிவுத் தலைவர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.



# வாழ்வாதார உதவிகள்

(பைஷல் றிபாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆலம்குளம் மற்றும் சம்பு நகர் பிரதேசங்களில் வாழும் குடும்பங்களுக்கு உலர்உணவு பொருள்கள், மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன நேற்று (06) வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மிசேரியோர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட இந்த உபகரணங்களை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ஷாபீர் சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கினார். உதவி பிரதேச செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# மன்னார் காற்றாலைத் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து இன்று போராட்டம்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் மாவட்டத்தில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் 2 ஆம் கட்ட பணிக்கு தொடர்ச்சியாக மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் எதிர்ப்பை வெளிப் படுத்தி வரும் நிலையில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் 2ஆம் கட்ட பணிக்கு ஆதரவாக இன்று வியாழக் கிழமை (07) முற்பகல் 11 மணியளவில் மன்னாரில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக் கப்பட்டது. மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் போராட்டம் இடம்பெற்றது. மன்னார் மாவட்ட வேலையற்றோர் சங் கம்என்ற பெயரில் போராட்டம் இடம்பெற்றது.

ஆண்கள், பெண்கள் என சுமார் 40 பேர் வரை போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மன் னார்-தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள நடுக்குடா கிராமத்தைச் சேர்ந்த வர்கள் எனவும் அடம்பன் பகுதியை சேர்ந்த ஒருவர் இந்தப் போராட்டத்தைத் தலைமை தாங்கி முன்னெடுத்துள்ளார் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

நடுக்குடா உள்ளிட்ட பகுதிகளில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் 2 ஆம் கட்டப் பணியைத் தாமதம் இன்றி முன்னெடுக்க வேண்டும். அதனால் வேலை இல்லாத பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். பொது அமைப்புக் கள் தமது இலாப நோக்கத்துக்காகவே இத்திட்டத்துக்கு எதிர்ப்பை முன்னெடுத்து வருகின்றன என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் மகஜரை வாசித்த பின் ஊடகங்கள் கருத்து கோரிய போதும் எவ்வித கருத் துக்களையும் தெரிவிக்காது அவ்விடத் தில் இருந்து சென்றுவிட்டனர்.

இதன் போது போராட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தின் 2ஆம் கட்ட பணிக்கு ஆதரவாக மன் னாரில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டால், காற்றாலை மின் உற்பத்தி திட்ட பணியில் வேலை பெற்று தருவதாக கூறித் தம்மை அழைத்து வந்தனர் என்று தெரிவித்துள்ளார்.





## பேசாலையில் 2 ஆம் கட்ட காற்றாலை அமைக்க

# தனியார் காணி சுவீகரிப்பதற்கு கடும் எதிர்ப்புக் கூறினர் மக்கள்!

**( மன்னார் நிருபர் )**

மன்னார், பேசாலை பகுதியில் காற்றாலை அமைக்கும் திட்டத்துக்குக் காணியை அடையாளப்படுத்தும் நோக்குடன் மன்னார் பிரதேச செயல கத்தில் இருந்து அதிகாரிகள் அடையாள விளம்பரத்தை காட்சிப்படுத்திய போது காணி உரிமையாளர்கள், மக்கள் அவ்விடத்தில் எதிர்ப்பு தெரிவித்த சம்பவம் நேற்று புதன்கிழமை(06) காலை இடம்பெற்றது.

இச்சம்பவமானது பேசாலை மேற்கு கிராம அலுவலகப் பிரிவில் தனியார் காணி பகுதியில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

காணி அமைச்சின் பணிப் புரைக்கு அமைவாக மன்னார் தீவில் பேசாலைப் பகுதியில் காற்றாலை அமைக்கும் திட்டத்துக்குக் காணியை அடையாளப் படுத் தும் நோக்குடன் மன்னார் பிரதேச செயலகத்தில் இருந்து அதிகாரிகள் நேற்று புதன்கிழமை (06) காலை வருகை தந்திருந் தனர்.

மன்னார் பிரதேச செயலாளரால் அறிவுறுத்தப்பட்ட மும்மொழி கொண்ட அறிவுறுத்தல் விளம்பரம் சம்பந்தப்பட்ட காணியில் பார்வைக்கு வைத்தனர்.

அந்த அறிவித்தல் பிரசுரத்தில் ‘மன்னார் காற்று மின் செயற்றிட்டம் இரண்டாம் கட்டமாக தேவையான புதிய காற்றாலைகளை பொருத்துவதற்கும் மற்றும் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணிப்பதற்குமே இக் காணி சுவீகரிக்கபடுகிறது’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதை அறிந்த காணி உரிமையா ளர்கள், பேசாலை பங்குத்தந்தை அருட்பணி அன்ரன் அடிகளார் உட்பட இந்தக் கிராம மக்கள் சிலர் சம்பவ இடத்துக்குச் சென்று இதற்கு எதிராகக் குரல் எழுப்பினர்.

இது தொடர்பாக அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்-

மின் காற்றாலை அமைப்பதற்காக காணி அமைச்சிலிருந்து குறிப்பிட்ட காணியை அளவீடு செய்வதற்கு நோட்டீஸ் போடுமாறு மன்னார் பிரதேச செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டமை யால் முதல் கட்ட நடவடிக்கையாக இது இடம்பெற்றுள்ளது.

ஆகவே இது தொடர்பாக காணி உரிமையாளர்கள் தங்கள் காணி என உரிமை கோரும் பட்சத்தில், இப்பகுதி மக்களின் விருப்பு வெறுப்புகளை மன்னார் பிரதேச செயலாளர் ஊடாக எழுத்து மூலம் தெரிவிக்கும் பட்சத்தில் இதனை உயர் மட்டம் பரிசீலிக்கும் என்று கூறினார்.



# உண்மை மறைக்கப்பட்ட ஈஸ்டர் தாக்குதல் ! நீதி மறுக்கப்பட்ட நவாலி படுகொலை !!

■ நவீனன்

**(சர்வதேச நீதி கோரி நிற்கும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களைப் போல சர்வதேச நீதி கோரலில் நவாலி தேவாலய படுகொலையும் இடம்பெற வேண்டும். இதன் மூலமே சர்வதேசம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வழி செய்ய வேண்டும் )**

அப்பாவி உயிர்கள் பல காவுகொள்ளப்பட்ட அந்த நாள்களை தென் இலங்கையர்கள் வாழ்வில் ஆறாத வடுக்களாக மாற்றியது. இன்றுவரை அது மனங்களில் கணன்று கொண்டிருக்கிறது. இலங்கையில் கடந்த 2019 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் இலங்கையை மட்டுமல்ல சர்வதேச நாடுகளையும் உலுக்கிப்போட்டன.

**ஈஸ்டர் தாக்குதல்**

கோரமிக்க இந்த குண்டு தாக்குதலில் 250 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். இதில் சில வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் உள்ளடங்குகின்றனர். தற்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிரித்தானியாவின் சனல் 4 ஊடகம் வெளியிட்ட ஆவணப்படத்தில் பல உண்மைத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் இரகசியங்கள் உடைக்கபடுமா அல்லது முடிவில்லாது விசாரணைகள், ஆணைக்குழுக்கள் என்று காலம் கடந்து கொண்டிருக்கிருமா எனத் தெரியவில்லை. ஆயினும் பலியெடுக்கப்பட்ட உயிர்களுக்கு நீதி கிட்டவில்லை. இந்த நிலையில், புதிய தகவலை வெளியிட்டு மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது சனல் 4 தொலைக்காட்சி.

நவாலி தேவாலயப் படுகொலை

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைப் போலவே 28 வருடங்கள் முன்பாக, நவாலி தேவாலயப் படுகொலையில் கொல்லப்பட்டவர்களின் வலி, உயிர் தப்பியவர்கள், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் நவாலி சமூகத்தின் மனதிலும் இதயங்களிலும் என்றும் எஞ்சிநிற்பதுடன் அந்தப் படுகொலை எப்போதும் நினைவிலிருக்கும்.

நவாலி தேவாலயத் தாக்குதல் யாழ்ப்பாணம் (சென். பீற்றர் தேவாலய) மீது இலங்கை அரசு விமான குண்டு தாக்குதல் நடத்தி இன்று 28 வருடங்கள் கடந்து இருக்கின்றது.

யாழ். நவாலி தேவாலயத்தில் இருப்பது பொது மக்கள் என்று தெரிந்தே ஸ்ரீலங்காவின் விமானப் படையினர், தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் மட்டுமல்ல, சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் தெரிவித்திருந்தன.

இலங்கை விமானப் படையினரே குற்றவாளிகள் எனக் கூறப்படும் சூழலில், நவாலி தேவாலய தாக்குதலில் உயிர் தப்பியவர்களாலும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினராலும் மற்றும் வடக்கிலுள்ள தமிழ் அமைப்புகளாலும் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை அற்றுப்போய் விட்டது.

நவாலி சென். பீற்றர் தேவாலயத்தின் மீது இலங்கை அரசு விமான குண்டு தாக்குதல் நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு 28 வருடங்கள் கடந்தும் நீதி கிடைக்கவில்லை. ஆயினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச ஆதரவுகள் பல கிடைத்தன.

ஆனால் வடக்கு – கிழக்கில் அத்தகைய ஆதரவைப் பெற்றவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பது கேள்விக்குறியாகும்.

**பொது மக்கள் என்று தெரிந்தே தாக்குதல்**

1995 ஆம் ஆண்டு ஜுலை 9 இல் யாழ்ப்பாணம் நவாலி தேவாலயம் (சென். பீற்றர்) மீது இலங்கை விமானப் படையினரால் நிகழ்த்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் 100 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 150 பேருக்கு மேல் காயமடைந்தனர். வலிகாமம் பகுதியில் இலங்கை அரசினரால் முன்னோக்கிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட நாளில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

பலாலியில் இருந்தும் அளவெட்டியில் இருந்தும் ஷெல் தாக்குதல்களையும் குண்டுத் தாக்குதல்களையும் மக்கள் குடியிருப்புகளை நோக்கி இராணுவத்தினர் மேற்கொண்டிருந்தனர். இதனால் மக்கள் உடுத்த உடையுடன் கையில் அகப்பட்ட பொருள்களுடன் வெளியேறிக் கொண்டிருந்தனர்.

யாழ். நகரப் பகுதியில் இருந்து அராலி நோக்கி வந்து கொண்டிருந்த புக்காரா விமானம் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியது. மாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் தேவாலயம் பலத்த சேதமடைந்தது.

**தமிழ் இனப் படுகொலை**

நவாலி தேவாலய படுகொலை நினைவு நாளில் இது தொடர்பாக கருத்து தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், “1995ஆம் ஆண்டு ஜுலை 9ஆம் திகதி இதே கால கட்டத்தில் ஸ்ரீலங்கா விமானப் படையினரால் குண்டு தாக்குதல் நடாத்தி 100 இற்கும் மேற்பட்ட உயிர்கள் கோரமாக கொல்லப்பட்டு பல வருடங்கள் கடந்து இருக்கின்றது.

சந்திரிகா அரசின் ஆட்சி காலத்தில் தமிழர் தாயகப் பகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது பொது மக்கள் ஆலயங்களிலும், தேவாலயங்களிலும் தஞ்சமடைந்து இருந்தார்கள். அப்போது இலங்கையினுடைய விமானப் படைக்கு சொந்தமான இரண்டு ‘புக்காரா’ விமானங்களால் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் சிறுவர்கள், பெரியவர்கள், பெண்கள், முதியோர்கள் என்று வேறுபாடு இல்லாமல் உடல் சிதறி பலியானார்கள் பலர் படுகாயம் அடைந்தார்கள்.

இது ஒரு அப்பட்டமான தமிழ் இனப் படுகொலையாகத் தான் நாங்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)




(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கின்றோம். அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாறி மாறி ஆட்சிக்கு வந்த எந்த அரசாலும் நீதி வழங்கப்படவில்லை.

**நினைவுச்சின்னங்களும் நினைவு கூரும் வழிபாடுகளும்**

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில்பாதிக்கப்பட்டவர்களுக்கான நினைவுச் சின்னங்கள், கட்டுவாபிட்டி (நீர் கொழும்பு) மற்றும் கொச்சிக்கடை (கொழும்பு) ஆகிய இடங்களில் ஓரிரு மாதங்களிலேயே நிறுவப்பட்டதுடன், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் முதலாவது வருட பூர்த்தியை நினைவு கூருவதற்கான விரிவான பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அரசின் வெளிப்படையான ஆதரவுடன் கொழும்பு மறை மாவட்ட பேராயரால் முதல் வருட நினைவு நிகழ்வுகள் தேசிய அளவில் நிகழ்த்தப்பட்டன. அத்துடன் தேசிய தொலைக்காட்சிகளில் நினைவுநிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன.

கொழும்பு பேராயரின் நீதிக்கான கோரிக்கைக்கு தேசிய ஊடகங்களில் முக்கிய இடம் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர்தப்பியவர்களின் அதிர்ச்சியை மதிப்பதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் துன்பதுக்குக் கண்ணியமளித்தல், நீதி மற்றும் இழப்பீடு என்பனவற்றுக்கும் இந்த நிகழ்வுகள் முக்கியமானதாகும்.

**வடக்கில் நினைவு கூர மறுப்பு**

ஆயினும் தமிழர் பகுதிகளில் இத்தகைய நினைவு கூரலுக்கு உரிமை மறுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் நவாலியில் பாதிக்கப்பட்டவர்களுக்காக அச்சமூகம் எளிமையான நினைவுச் சின்னம் ஒன்றை நிர்மாணித்துள்ளனர். வருடாந்தம் நினைவு நிகழ்வுகள் உள்ளூர் சமூகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படுகின்றன.

பல வருடங்கள் கடந்தும் கூட அந்த சோகத்தின் வலி, உயிர் தப்பியவர்கள், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் நவாலி சமூகத்தின் மனதிலும் இதயங்களிலும் எஞ்சி நிற்பதுடன் அந்தப் படுகொலைக்கான நீதி இன்னமும் கிடைக்கவில்லை.

தற்போது ஆண்டு தோறும் ஜுலை 9 ஆம் நாள் நவாலி புனித பீற்றர் ஆலயத்திலும், நவாலி சின்னக் கதிர்காமம் முருகன் ஆலயத்திலும் நினைவுகூரும் வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நவாலி வடக்கு சோமசுந்தரப் புலவர் வீதியிலும், நவாலி சென்.பீற்றர் ஆலயப் பகுதியிலும் படுகொலைச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**மூன்று ஆண்டுகளாக திட்டமிட்ட ஈஸ்டர் தாக்குதல்**

275 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் ராஜபக்ஷ அரசுக்கு விசுவாசமாகச் செயற்பட்டவர்கள இருந்தார்கள் என்று செப்டெம்பர் 05 பிரித்தானியாவின் சனல் 4 வெளியிட்ட அதிர்ச்சியூட்டும் ஆவணப்படத்தில் கூறப்பட்டுள்ளது. 'தி டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பல வருடங்கள் ராஜபச்ஷக்களின் விசுவாசியாக இருக்கும் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் உதவியாளராக இருக்கும், ஹன்சீர் அசாத் மௌலானா என்பவர் வழங்கிய சாட்சியங்களின் அடிப்படையில் இந்த ஆவணப்படம் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் 'தி டைம்ஸ்' ஊடகம் தெரிவிக்கின்றது.

இலங்கையில் பாதுகாப்பற்ற நிலைமை உருவாக்கப்பட வேண்டும் என ராஜபக்ஷக்கள் விரும்புகின்றனர். அவ்வாறான ஒரு சூழ்நிலை இருந்தால் மட்டுமே கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக ஆட்சி பீடம் ஏற முடியும் எனவும் அவர்கள் கருதுகின்றனர் என்று சுரேஷ் சாலே தம்மிடம் கூறியதாகக் குறித்த நபர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குண்டு தாக்குதல் ஒன்றிரண்டு நாள்களில் திட்டமிடப்படவில்லை எனவும் மூன்று ஆண்டுகளாக திட்டமிடப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ராஜபக்ஷக்களை மீண்டும் ஆட்சிப் பீடம் ஏற்றுவதற்காக நாட்டை ஸ்திரமற்றதாக்கும் முயற்சியாக இந்த குண்டு தாக்குதல் அமைந்திருந்தது என தெரிவித்துள்ளார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி குறித்த காணொளி சனல் 4 அலைவரிசையில் ஒளிபரப்புவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, தனது சட்டத்தரணி ஊடாக விடுத்த வேண்டுகோளுக்கு அமைய குறித்த ஒளிபரப்பு பிற்போடப்பட்டதாகவும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

**அப்பட்டமான மனித உரிமை மீறல்**

நவாலி தேவாலயம் அகோர சம்பவத்தில் இறந்தவர்களுடைய உறவுகள் இன்னும் அந்த துன்பத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் உறவுகளுக்கு நினைவேந்தல் செய்வதற்கும் கூட அப்போதைய ஆட்சியாளர்கள் தடுத்து வந்தார்கள்.

படுகொலை செய்யப்பட்ட நினைவுச் சின்னங்கள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் கடந்த ஆண்டும் இம்முறையும் புலனாய்வாளர்கள் நிறுத்தப்பட்டு நினைவேந்தலை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்து வந்தது.

இது அப்பட்டமான ஒரு மனித உரிமை மீறலாகும். ஏனெனில் ஒரு உரிமைக்காக போராடிய இனம், அந்த போராட்ட காலத்தில் நடைபெற்ற படுகொலைகளை நினைவுகூற அரச ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் மறுத்து வருகின்ற நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்படி இந்த நாட்டில் நீதி கிடைக்கும் என்ற ஒரு கேள்வி எல்லோர் மத்தியிலும் எழுந்து இருக்கின்றது.

**சர்வதேச நீதி வேண்டும்**

ஆகவே இவற்றுக்கு எல்லாம் ஒரு சர்வதேச நீதி பொறி முறை வேண்டும் என்பதற்காகத் தான் தமிழினம் சர்வதேச நீதி கோரி நிற்கின்றது. ஆகவே இந்த சர்வதேச நீதி கோரலில் நவாலி படுகொலையும் இடம் பெற வேண்டும். அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

இவ்வாறான இந்த படுகொலைகளுக்கு நீதி கிடைக்கின்ற போதுதான் எதிர் காலத்தில் தமிழ் மக்களுக்கு ஒரு உறுதியான பாதுகாப்பும் அவர்களுடைய உரிமைகளை உறுதிப்படுத்துகின்ற நியாயமான சூழ்நிலைகளும் உருவாகும்.



# ஆசியான் - இந்தியா ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு 12 அம்ச திட்டம்

## - ஆசியான் - இந்தியா உச்சிமாநாட்டில் மோடி வெளியிட்டார்

21 ஆம் நூற்றாண்டு ஆசியாவின் நூற்றாண்டு எனவும் நமது இந்த நூற்றாண்டில் கொரோனா தொற்றுக்கு பிந்திய ஓர் உலக ஒழுங்கு தேவைப்படுகிறது என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஆசியான் எனப்படும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்புக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பினை ஊக்குவிப்பதற்காக 12 அம்ச திட்டத்தினையும் பிரதமர் நரேந்திர மோடி முன்மொழிந்துள்ளார்.

இந்தோனேசிய தலைநகர் ஜகார்தாவில் நடைபெறும் ஆசியான் இந்தியா உச்சிமாநாட்டில் பிரதமர் மோடி கலந்துகொண்டார். இதன்போது அவர் உரையாற்றுகையில், தெற்குலகில் குரலை உரக்க ஒலிக்கச் செய்வதிலும், சுதந்திரமான இந்தோ பசிஃபிக் பிராந்தியத்தை உறுதி செய்வதிலும் இருதரப்புக்கும் ஆர்வம் உள்ளது. இந்த இலக்கினை அடைவதை நோக்கி அனைத்து ஆசியான் உறுப்பு நாடுகளுடன் இணைந்து பணியாற்ற இந்தியா உறுதியாக உள்ளது.

21 ஆம் நூற்றாண்டு ஆசியாவின் நூற்றாண்டு. இது நமது நூற்றாண்டு. அதற்கு கொரோனா தொற்றுக்கு பிந்திய உலக ஒழுங்கின் அடிப்படையிலான விதிகளை உருவாக்குவது அவசியம். தெற்கின் குரலை அதிகப்படுத்துவதில் நம் அனைவருக்கும் பொதுவான ஆர்வம் உள்ளது.

உலகின் நிச்சயமற்ற சூழ்நிலையிலும், ஆசியான் இந்தியாவின் உறவு ஒவ்வொரு துறையிலும் நிலையான வளர்ச்சியை எட்டியுள்ளது. இந்தியா மற்றும் 10 ஆசிய நாடுகளும் வரலாறு, புவியியல், பகிரப்படும் மதிப்புகள், அமைதி, வளமை போன்ற பல்வேறு காரணிகளால் இணைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் கிழக்கு கொள்கையின் மையத்தூணே ஆசியான்தான். ஆசியானின் மையத்தையும், இந்தோ பசிபிக் மீதான அதன் பார்வையையும் இந்தியா முழுமையாக ஏற்கிறது என்று தெரிவித்துள்ளார்.

# உதயநிதி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தமிழக ஆளுநரிடம் பா.ஜ.கவினர் கடிதம்!



சனாதனம் குறித்து வெறுப்புப் பிரச்சாரம் செய்ததாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மீது உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி வழக்குப்பதிவு செய்ய உத்தரவிடக் கோரியும், அமைச்சர் சேகர் பாபுவை பதவி நீக்கம் செய்யக் கோரியும் தமிழக ஆளுநரிடம், பா.ஜ.க. சார்பில் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது.

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில், ஆளுநர் ஆர்.என்.ரவியை தமிழக பா.ஜ.கவினர் இன்று சந்தித்தனர். இந்த சந்திப்பின் போது, ஆளுநரிடம் இரண்டு கடிதங்களை அவர்கள் கொடுத்தனர்.

பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை சார்பில் கொடுக்கப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில், சனாதன ஒழிப்பு மாநாடு என்ற பெயரில், வெறுப்புப் பிரச்சாரம் செய்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக, உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி தமிழகத்தில் வழக்குகள் பதிவு செய்ய ஆளுநர் உத்தரவிட வேண்டும்.

அமைச்சராகப் பொறுப்பேற்கும்போது செய்த பதவிப் பிரமாணத்தை மீறி, சனாதன ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்றதற்காக அமைச்சர்பி.கே.சேகர் பாபுவை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்த வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# நிலா, பூமியை படம் பிடித்தது ஆதித்யா-எல் 1

சூரியனை ஆய்வு செய்ய ஆதித்யா-எல் 1 விண்கலம் தன்னைத் தானே படம் எடுத்துக் கொண்டுள்ளது. தனது வட்டப்பாதையில் இருந்து பூமி மற்றும் நிலவை படம் பிடித்துள்ளது. இதனை இஸ்ரோ தனது சமூக வலைத்தள பக்கத்தில் பகிர்ந்துள்ளது.

சூரியனின் வெளிப்புற பகுதியை ஆராய்வதற்காக ஆதித்யா-எல் 1 எனும் நவீன விண்கலத்தை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் வடிவமைத்து, கடந்த 2 ஆம் திகதி விண்ணில் செலுத்தியது. தற்போது புவி நீள்வட்ட சுற்றுப்பாதையில் இந்த விண்கலம் பயணித்து வருகிறது.

இதன் சுற்றுப்பாதையை படிப்படியாக பெங்களூரில் உள்ள இஸ்ரோ கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து அதிகரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், ஆதித்யா-எல்1ல் பொருத்தப்பட்டுள்ள புகைப்பட கருவி மூலம் எடுக்கப்பட்ட படத்தை இஸ்ரோ பகிர்ந்துள்ளது.

# நிலவை ஆய்வு செய்வதற்கான விண்கலனை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது ஜப்பான்!



நிலவை ஆய்வு செய்வதற்கான விண்கலனை ஜப்பான் வெற்றிகரமாக விண்ணில் ஏவியுள்ளது. இன்று அதிகாலை அந்த நாட்டு விஞ்ஞானிகள் இதனை விண்ணில் செலுத்தியுள்ளனர்.

நிலவை 120 முதல் 180 நாட்களில் இந்த விண்கலன் அடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் தனேகஷிமா விண்வெளி மையத்தில் எச்.ஐ.ஐ.-ஏ லோஞ்சர் மூலம் நிலவை ஆய்வு செய்வதற்கான ஸ்மார்ட் லேண்டர் மற்றும் செயற்கைக்கோள் மூலம் பேரண்டம் குறித்தும் ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதன் மூலம் பேரண்டத்தின் தோற்றம் குறித்து அறிந்து கொள்ள முடியும் என ஜப்பான் விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இந்த பணியில் ஜப்பான் விண்வெளி ஆய்வு முகமைக்கு அமெரிக்காவின் நாசா உதவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலவை நோக்கி விண்ணில் செலுத்தப்பட்டுள்ள ஸ்லிம் லேண்டர் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் தரையிறங்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பின்பாயிண்ட் லேண்டிங் எனும் தொழில்நுட்பத்தில் இந்த லேண்டர் வடிவமைக்கப்பட்டுள்ளது. நிலவுக்கு வெறும் சில மீட்டர் தொலைவில் இருந்து இதனை லேண்ட் செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் விண்வெளி ஆய்வில் இந்தத் தொழில்நுட்பம் புரட்சியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்யா, அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகிய நான்கு நாடுகளின் விண்கலன்கள் நிலவில் வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டுள்ளன. ஜப்பான் இந்த முயற்சியில் வெற்றி பெற்றால் ஐந்தாவது நாடாக இந்தப் பட்டியலில் இணையும்.

கடந்த மாதம் இந்தியாவின் இஸ்ரோ, நிலவில் சந்திரயான்-3 இன் விக்ரம் லேண்டரை தரையிறக்கியது. சுமார் 15 நாட்களுக்கு நிலவின் தென்துருவ பகுதியில் இந்த லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவர் ஆய்வுப் பணியை மேற்கொண்டது. தற்போது உறங்கு நிலைக்கு இரண்டும் சென்றுள்ளன.

# சீனாவின் வரைபடத்துக்கு ஜப்பானும் கடும் எதிர்ப்பு!

தனது நாட்டுக்கான புதிய வரைபடத்தினை சீனா அறிமுகப்படுத்தியிருந்த போது, பிலிப்பைன்ஸ்,மலேசியா, வியட்நாம், தாய்வான், இந்தியா ஆகிய 05 நாடுகள் கடுமையான எதிர்ப்புகளை வெளியிட்டு வந்தன.

இந்த வரிசையில் இப்போது ஜப்பானும் இணைந்து தனது எதிர்ப்புகளை வெளியிட்டு வருகிறது.

சீனா தனது வரைபடத்தில் தென் சீனக் கடல் பகுதிகள் சிலவற்றை இணைத்ததனால், பிலிப்பைன்ஸ், மலேசியா, வியட்நாம், தாய்வான் ஆகிய நாடுகள் தமது எதிர்ப்புகளை தெரிவித்திருந்தன.

இதே போன்று இந்தியாவின் அருணாச்சல பிரதேசமும் வரைபடத்தில் இணைந்து இருந்ததனால் இந்தியா கடும் எதிர்ப்புகளை தெரிவித்தது.



இந்த வரிசையில் சீனாவின் புதிய வரைபடத்துக்கு ஜப்பானும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. ஜப்பானின் ஒகினாவா மாகாணத்தில் உள்ள சென்காகு தீவுகள் சீனா வரைபடத்தில் இணைக்கப்பட்டுள்ளது என்றும் அந்த தீவுகளிற்கு சீனப் பெயரான டியாயு தீவுகள் என பெயர் மாற்றப்பட்டு குறிக்கப்பட்டுள்ளதாகவும் ஜப்பான் குற்றம் சுமத்தியுள்ளது.

ஜப்பானிற்குச் சொந்தமான சென்காகு தீவுகளை சீனா தனது வரைபடத்தில் இணைத்ததனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம், அந்த வரைபடத்தை திரும்பப் பெறும்படி சீதை வலியுறுத்தி உள்ளோம் என்றும் ஜப்பான் அரசின் தலைமை செயலாளர் ஹிரோகாசு மட்கனோ கூறியுள்ளார்.

வரலாற்று ரீதியாகவும், சர்வதேச சட்டத்தின் படியும் சென்காகு தீவுகள் ஜப்பானுக்கே சொந்தமானது, இந்த விடயத்தைப்பொறுத்த வரை அமைதியாகவும், உறுதியாகவும் ஜப்பான் பதிலளிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ஆனால் ஜப்பானின் எதிர்ப்பினை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று சீனா அறிவித்துள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.